Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 117

திங்கட்கிழமை
23 மார்ச் 2026

பங்குனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## ஆணொருவரின் சடலம் மீட்பு!

வடமராட்சி, மார்ச் 23
வீடொன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
அங்குள்ள வீடொன்றில் வசித்த நபர் சில நாள்களாக வெளியே நடமாடாத நிலையில், அந்த வீட்டில் இருந்து (தொடர்ச்சி 11)

## விரிவுரையாளர் கொடூரக் கொலை; சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர் கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சித்தமருத்துவபீட விரிவு (தொடர்ச்சி 11)

வளைகுடாவில் நடைபெறும்

# போர் முடிவுக்கு வந்தாலும் நெருக்கடி உடனே தீராது!

### எரிபொருள் சிக்கனம் அவசியம் அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 23**
**போர் முடிவுக்கு வந்தாலும் நமது பொருளாதாரத்தில் போரின் தாக்கம் ஒரே இரவில் முடிந்துவிடாது. ஒரு நாடாக நாம் நிச்சயமாக எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.** (தொடர்ச்சி 11)

## எரிபொருள் கப்பல் வராததால் மின் உற்பத்தியில் நெருக்கடி!

### பாவனையை மட்டுப்படுத்த பொதுமக்களிடம் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 23
உலகளாவிய எரிபொருள் விநியோகக் கட்டமைப்புப் பாதிப்படைந்துள்ளதால், மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் எண்ணெய் மற்றும் நெப்தா எரிபொருள் போன்றவற்றுக்கு (தொடர்ச்சி 11)

## எரிபொருள் விலை உயர்ந்ததால் நிரப்பு நிலையங்களுக்கு 'பம்பர்'

யாழ்ப்பாணம், மார்ச் 23
நேற்றுமுன்தினம் இரவு எரிபொருள் விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலவும் இலாபம் பார்த்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
எரிபொருள் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் திடீரென அதிகரிக்கப்பட்டிருந்தன. (தொடர்ச்சி 11)

## பாடசாலைகளை மூடமாட்டோம்!

### அரசாங்கம் உறுதி

கொழும்பு, மார்ச் 23
எரிபொருள் நுகர்வைக் குறைக்கும் நோக்கில் பாடசாலைகளை மூடுவதற்கு அரசாங்கம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
நேற்று கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு (தொடர்ச்சி 11)

## சொகுசு பஸ்ஸில் பயணித்தவர் சாவு

வவுனியா, மார்ச் 23
கொழும்பு வவுனியா சொகுசு பஸ்ஸில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் (தொடர்ச்சி 12)



## வதந்தி பரப்பிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 23
நாட்டில் எரிபொருள் இல்லை என சமூக வலைதளங்கள் ஊடாகப் போலித்தகவல்களைப் பரப்பிய குற்றச்சாட்டில் ஒருவர் மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைது (தொடர்ச்சி 11)

## எங்களைத் தாக்கினால் உலகம் இருளில் மூழ்கும்!

### ஈரான் சபாநாயகர் எச்சரிக்கை

தெஹ்ரான், மார்ச் 23
ஈரானின் மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்குப்பதிலடியாக பிராந்தியம் முழுவதிலும் உள்ள எரிசக்தி மற்றும் எண்ணெய் உட்கட்டமைப்புகள் மீது "உடனடியாக" தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் மொஹமட் பாகர் காலிபாஃப் எச்சரிக்கை விடுத் (தொடர்ச்சி 11)

## பஸ் கட்டணங்களும் உயரும்; அமைச்சரவை ஆலோசனை

கொழும்பு, மார்ச் 23
எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளதை அடுத்து, பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு யோசனை முன்வைத்துள்ளது.
இந்த யோசனையை இன்று அமைச்சரவை (தொடர்ச்சி 11)



## பதுக்கிய எரிபொருள் யாழ்ப்பாணத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணத்தில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகை எரிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. ஊரெழுவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் (தொடர்ச்சி 12)

## இலங்கை வருகிறது நாணய நிதியக்குழு

கொழும்பு, மார்ச் 23
சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 9ஆம் திகதிவரை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்ட மீளாய்வு, மத்திய கிழக்கு மோதல்களால் இலங்கையின் பொருளாதாரம் எதிர்கொண்டிருக்கும் தாக்கங்கள் என்பவற்றை (தொடர்ச்சி 11)

முச்சந்தி முரளி

"இவையள் சொல்றதைப் பாக்க கோத்தா காலத்தை விடவும் கொடுமையான காலம் வரப்போகுது போல கிடக்கு"

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4383 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 24 42 46 80 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹனை ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1450 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 16 27 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0409 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 9 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2489 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 19 21 52 62 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6141 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 3 9 2 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2171 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 07 12 26 39 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0257 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 25 28 |

# தேசிய பாதுகாப்புப் போர்வையில் தகவல்களை மறைக்கமுடியாது

## கடற்படைக்கு நீதிமன்றம் உத்தரவு

**கொழும்பு,மார்ச் 23**

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் விவரங்களை, 'தேசிய பாதுகாப்பு' என்ற காரணத்தைக் காட்டி தன்னிச்சையாக மறுக்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.**

2022ஆம் ஆண்டு மக்கள் போராட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடற்படைக் கப்பலில் பயணித்தது தொடர்பான தகவல்களை வழங்கக் கோரிய வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு கிடைத்துள்ளது.

2022 ஜூலை மாதம் ஏற்பட்ட மக்கள் எழுச்சியின் போது, அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 'எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு' என்ற கடற்படைக் கப்பலில் ஏறித் தப்பிச் சென்றார் எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக ஏ.ஏ.எம்.ஆர். அலி என்பவர் 2022 செப்ரெம்பரில் தகவல் அறியும் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி கப்பலில் பயணித்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? அந்தப் பயணத்தின் தூரம் மற்றும் அதற்கான செலவு எவ்வளவு? அந்தச் செலவைப் பொறுப்பேற்றது யார்? என அவர் கேள்வியெழுப்பியிருந்தார். தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்தத் தகவல்களை வழங்கக் கடற்படை மறுத்திருந்தது. எனினும், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தலையிட்டு, பயணச் செலவு மற்றும் அதற்கான நிதி மூலம் தொடர்பான விவரங்களை மாத்திரம் வழங்குமாறு கடற்படைக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து கடற்படை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. நீதியரசர்களான கலாநிதி சுமுது பிரேமச்சந்திர மற்றும் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, நிதி தொடர்பான தகவல்களை வழங்குவதால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படும்? என்பதை கடற்படை ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறிவிட்டது. வெறுமனே பொதுப்படையான காரணங்களைக் கூறி தகவல்களை வழங்காமல் இருக்கமுடியாது எனத் தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வெளிநாட்டுக் கொள்கையில் அரசாங்கம் சறுக்கல்நிலை

## கபீர் ஹாசிம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 23

மத்திய கிழக்கு போர்ச் சூழலில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கை உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்று எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொன்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் தற்போதைய நகர்வுகள் நாட்டின் சுயாதீனத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஈரானியக் கப்பல் இலங்கைக்குள் வருவதற்கு 11 மணித்தியாலங்கள் வரை அனுமதி மறுக்கப்பட்டமை ஏன்? முதற் கப்பல் தாக்கப்படும் வரை காத்திருந்துவிட்டு, இரண்டாவது கப்பலுக்கு உடனடியாக அனுமதி வழங்கியமை வெளிநாட்டுக் கொள்கையில் உள்ள பலவீனத்தையே காட்டுகிறது.

இலங்கை தனது தீர்மானங்களை எடுக்க வேறு நாடுகளின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையில் உள்ளதா?

இலங்கை சிறிய நாடாக இருந்தாலும், வரலாற்றில் எமது வெளிநாட்டுக் கொள்கை உலக நாடுகளால் மதிக்கப்பட்டது. ஆனால், தற்போதைய அரசாங்கம் அத்தகைய உறுதியான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை - என்றார். (ச-இ)

# எரிபொருள் ஒதுக்கீட்டுச் சீரின்மையால் தனியார் பஸ் சேவை முடங்கலாம்!

## சங்கத் தலைவர் கெமுனு தெரிவிப்பு


கொழும்பு,மார்ச் 23

தனியார் பேருந்துகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு இதுவரை முறையாக சீர்செய்யப்படவில்லை. இதுதொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், பேருந்து போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதமடையக்கூடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில பகுதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்கள் ஊடாக தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டாலும், ஏனைய பகுதிகளில் டிப்போக்களில் எரிபொருள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பேருந்து உரிமையாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பகல் வேளையில் டிப்போக்களில் வரிசையில் நின்று எரிபொருள் நிரப்புவதால் பேருந்துகளைச் செலுத்தமுடியாத நிலை உருவாகின்றது. இதனால் பெரும்பாலும் பேருந்துச் சேவைகள் வீழ்ச்சியடையக்கூடும் - என்றார். (ச-இ)



| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0849 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 2 7 9 8 3 9 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3115 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 03 53 61 71 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 07 15 45 67 |
| வெற்றி வாரம் | 5276 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0945 |
| வெற்றி இலக்கம் | 30 41 42 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கும்பம் | |
| வெற்றி இலக்கம் | 24 31 40 49 |
| சீட்டிழுப்பு வாரம் | 4827 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கம் | 04 14 34 52 |
| வெற்றி வாரம் | 2291 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 22.03.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 32 44 45 57 |
| வெற்றி வாரம் | 2941 |

# அரசாங்கத்துக்குள்ளேயே ஏகபோக மாபியாக்கள்!

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,மார்ச் 23

எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துக்கொள்வனவுத் துறைகளில் காணப்படும் ஏகபோக ஆதிக்கத்தை ஒழிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ள நிலையில், அரசாங்கத்துக்கு உள்ளேயே புதிய ஏகபோகக் கும்பல்கள் உருவாகி வருவதாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட சில நிறுவனங்கள், வெவ்வேறு போர்வையில் புதிய ஏகபோகக் கும்பல்களாக உருவெடுத்து வருகின்றன.

பழைய கும்பல்களுக்குப் பதிலாகப் புதிய கும்பல்களைக் கொண்டு வருவதால் நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

வெறும் போர்வைகளை மாற்றுவதன் மூலம் ஊழலையோ அல்லது ஏகபோகத்தையோ ஒழிக்கமுடியாது.

அத்தியாவசியச் சேவைகளில் ஒரு சில நிறுவனங்களின் ஆதிக்கத்தைத் தடுத்து, சந்தையில் உண்மையான போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலமே மக்களுக்கு உண்மையான நிவாரணத்தை வழங்கமுடியும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் அத்தியாயத்தில் ஐ.ம.ச., ஐ.தே.க. கைகோர்க்கும்

*சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு*

**கொழும்பு, மார்ச் 23**
**இலங்கையின் இரு பிரதான அரசியல் சக்திகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஒன்றிணைந்து, நாட்டைச் சரியான திசையில் கொண்டுசெல்வதற்கான புதிய 'மக்கள் முகாம்' ஒன்றை வலுப்படுத்தும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தவறான அரசியல் முடிவுகளால் 220 இலட்சம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ள இந்தத் தருணத்தில், சித்தாந்தப் போராட்டங்களுக்கு அப்பாற்பட்டு மக்களை மையப்படுத்திய அரசியலே தேவை. வலதுசாரி அல்லது இடதுசாரி என்ற காலாவதியான வெளிநாட்டுக் கோட்பாடுகளைப் புறந்தள்ளிவிட்டு, பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கும் மக்களாட்சிக் கோட்பாடுகளை முன்னிறுத்தவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து இந்தப் புதிய மக்கள் முகாமிற்கு வலுவான அடித்தளத்தை இடும். சமூகம் இப்போது கட்சி தாவும் அரசியலையோ அல்லது பணத்துக்காக விலைபோகும் அரசியலையோ ஏற்றுக்கொள்வதில்லை. காமினி திசாநாயக்க மற்றும் ரணசிங்க பிரேமதாஸ ஆகிய இரு தலைவர்களும் இறுதியில் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்பினர். அவர்கள் காட்டிய 'மக்கள் பாதை'யே தற்போதைய தேவையாக உள்ளது- என்றார். (ச-இ)

# திரிபோஷா உற்பத்தி; மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 23
மூலப்பொருள் தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த திரிபோஷா உற்பத்தி நடவடிக்கைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனம் அறிவித்துள்ளது.

திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான தரப்படுத்தப்பட்ட மக்காச்சோளம் கிடைக்காமையினால் கடந்த சில மாதங்களாக உற்பத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவின் நேரடித் தலையீட்டின் கீழ், அமைச்சரவை அங்கீகாரத்துடன் தரப்படுத்தப்பட்ட மக்காச்சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரச வர்த்தகப் பல்வகைக் கூட்டுத்தாபனத்துடன் அண்மையில் உடன்படிக்கை எட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்தே உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மாத இறுதிக்குள் திரிபோஷா கிடைக்காத அனைத்துப் பயனாளிகளுக்கும் விநியோகிக்கும் வகையில், சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் ஊடாக நாடளாவிய ரீதியில் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# எரிபொருள் விலையேற்றம்; சைக்கிள்களுக்கு மவுசு

கொழும்பு,மார்ச் 23
நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அண்மைய விலை உயர்வு காரணமாக தற்போது மின்சார வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளுக்குப் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது துவிச்சக்கரவண்டிகளின் விற்பனை சந்தையில் கணிசமாக அதிகரித்துள்ளது. அத்துடன் எரிபொருள் செலவைக் குறைக்கும் நோக்கில், மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார்கள் மீதான ஆர்வம் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது என்றும் சந்தை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சினோபெக், லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் விலையுயர்வு!



கொழும்பு,மார்ச் 23
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைகளை அதிகரித்ததைத் தொடர்ந்து லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் நிறுவனங்களும் தமது எரிபொருள் விலைகளை உயர்த்தியுள்ளன. இதன்படி, சினோபெக் நிறுவனத்தின் ஒக்ரேன் 95 பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 122 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 487 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலையை 219 ரூபாவால் அதிகரித்து அதன் புதிய விலை 572 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைகளுக்கு நிகராகத் தனது எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளது. (ச-இ)

# ஓட்டோக் கட்டணத்தை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு,மார்ச் 23
அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலையைக் கருத்திற்கொண்டு, முச்சக்கரவண்டிகளுக்கான முதலாவது கிலோமீற்றருக்கான கட்டணத்தை 20 ரூபாவால் அதிகரிக்குமாறு முச்சக்கரவண்டிச் சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. இதுதொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் எல். ரோஹண பெரேரா தெரிவிக்கையில், எரிபொருள் விலை மீண்டும் திருத்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு எமது சேவைக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே முச்சக்கரவண்டிக் கட்டணத்தின் முதலாவது கிலோமீற்றருக்காக 20 ரூபாவை அதிகரிக்குமாறு நாங்கள் முன்மொழிகிறோம்-என்றார். (ச-இ)




## பள்ளிக்கூடங்களும் பைபிளும் –2

பள்ளிக்கூடங்களுக்கு பைபிள் குடுக்க வெளிக்கிட்ட விசயத்தின்ர அடுத்த பகுதியைத்தான் போன சனிக்கிழமை பட்சி சொல்லியிருக்க வேணும். ஆனால் கியூ.ஆர். கில்லாடியளால சனம் ஏமாத்துப் படுறதை உடன நிப்பாட்டோணும் எண்டதுக்காக அவசரமா அதைச் சொல்லவேண்டி வந்திட்டுது. அதால இண்டைக்கு மேலதிகமான அதிகாரி என்னெண்டு அந்தக் கடிதத்தால தன்ர சுயரூபத்தைக் காட்டி மாட்டினவர் எண்டதைப் பாப்பம்.

முதல் உந்த பைபிளைக் குடுக்க வந்த சபைக்காரருக்கு ஒரு கொண்டிசனும் போடாமல் 'பைபிளைப் பள்ளிக்கூடங்களுக்கு குடுக்க அனுமதி' எண்டமாதிரித்தான் கடிதம் குடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தின்ர கொப்பியை எல்லா வலயங்களுக்கும் அனுப்பியுமிருக்கிறார். அதுக்குப் பிறகுதான் உந்த விசயம் 'சிவசேனைக்காரரின்ர' காதுக்குப் போய் பத்தியெரியத் தொடங்கினது. உண்மையில இப்பிடி ஒரு மதம் சார்ந்த புத்தகத்தைக் குடுக்கிறதெண்டால் கூட, டிப்பார்ட்மெண்டில இருக்கிற துறைசார்ந்த ஆக்களோட ஒருக்கா கதைச்சுப் பேசித்தான் முடிவெடுத்திருக்க வேணும். மாகாண கல்வித் திணைக்களத்தில கிறிஸ்தவப் பாடத்துக்கெண்டு உதவிக் கல்விப்பணிப்பாளரா பாதர் ஒருத்தர் இருக்கிறார். அவரிட்டையாவது உந்த மேலதிகமான அதிகாரி ஏதும் அட்வைஸ் கேட்டிருக்கலாம். ஆனால் அவரிட்ட இந்த பைபிள் விசயத்தைப் பற்றி மேலதிகமான அதிகாரி மூச்சும் விடேலை. அந்தப் பாதருக்கே தெரியாமல் தான், அனுமதியைக் குடுத்திருக்கிறார். பிறகு எல்லாப் பக்கமும் எதிர்ப்புக் கிளம்ப, தான் முதல் குடுத்த கடிதத்துக்கு மேலதிகமா, 'சைவப்பிள்ளையளுக்கோ, இஸ்லாமியப் பிள்ளையளுக்கோ, ரோமன் கத்தோலிக்கப் பிள்ளையளுக்கோ, பௌத்தப் பிள்ளையளுக்கோ இந்தப் பைபிளைக் குடுக்கக்கூடாது' எண்ட வசனத்தை மேலதிகமாப் போட்டு, தனக்குச் சிக்கல் வராமல் ஒரு கவர் எடுத்திருக்கிறார் அந்த மேலதிகமான அதிகாரி.

ஒருவேளை, உந்த விசயத்தை சிவசேனைக்காரர் தூக்கிப் பிடிச்சிருக்காட்டி, எல்லாருக்கும் பைபிள் குடுபட்டிருக்கும். அதோட இந்த ரண்டாவது கடிதத்தில 'ரோமன் கத்தோலிக்கப் பிள்ளையளுக்கும் குடுக்க வேண்டாம்' எண்டு எழுதி, உந்த பைபிளைக் குடுக்க வெளிக்கிட்ட நோக்கத்தைக் காட்டிக்குடுத்திட்டார் அந்த மேலதிகமான அதிகாரி. அதென்னென்னெண்டால், பைபிளை ஒவ்வொரு சபையும் தங்களுக்கு ஏத்தமாதிரி வெட்டிக்கொத்தி, மாத்தி எழுதி வைச்சிருக்கினமாம். இந்தமுறை பள்ளிக்கூடங்களுக்கு பைபிளைக் குடுக்க வெளிக்கிட்ட சபையும், தங்கட கொள்கைக்கு ஏத்தமாதிரி மாத்தி எழுதின பைபிளைத்தான் குடுக்க வெளிக்கிட்டிருக்கினம். அப்ப வேதக்காரப் பிள்ளையளில பெரும்பான்மையான ஆக்களுக்கே குடுக்கமுடியாத பைபிளைத்தான் முதலில எல்லாருக்கும் குடுக்க பிளான் பண்ணி இருக்கினம். அப்ப பைபிளைக் குடுத்து ஆக்களைப் பிடிக்கிறதுதானே அவையின்ர நோக்கம்? இதுக்குப் பொறுப்பான பதவியில இருக்கிறவரும் சேர்ந்து தாளம் போட்டிருக்கிறார். என்னதான் ஆளாளுக்குத் தனிப்பட்ட மதப்பற்று, இனப்பற்று இருந்தாலும், பதவிக்கதிரையில இருக்கேக்க அதைத் தூக்கி அங்கால வைக்கோணும் கண்டியளோ!

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்

உங்கள் ராசிக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் 24.4.2028 வரை, 6இல் அமரும் சனிபகவான், விபரீத இராஜயோகத்தை அள்ளித் தரப் போகிறார். வாழ்க்கையே மாறும். முக்கியமான காரியங்களைப் பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வாழ்க்கைத் துணைவர் உறுதுணையாக இருப்பார். பிள்ளை வரத்தை எதிர்நோக்கியுள்ள அன்பர்களுக்கு, அந்த வரம் கிடைக்கும். மகனின் திருமணத்தை ஊரே மெச்சும்படி சிறப்பாக நடத்துவீர்கள்.

சனிபகவான் பூரட்டாதியில் பயணிக்கும் காலத்தில், பழைய கடன் தீரும். வீடு கட்ட கடனுதவி கிடைக்கும். எனினும் சமூக வலைத்தளங்களைக் கவனமாகக் கையாளுங்கள். வாகனங்களைச் சரியானமுறையில் பராமரியுங்கள். சனி உத்திரட்டாதியில் பயணிக்கும் காலமான 2.04.2026 முதல் 14.4.2027 வரையிலான காலம் சாதகமாகும். திடீர் பணவரவு உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். திருமணம், குழந்தைப் பாக்கியம் உண்டு. சிலருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும். அதேபோல் 14.4.2027 முதல் 24.4.2028 வரை சேமிப்புகள் அதிகரிக்கும் காலமாகும். விலையுயர்ந்த தங்க நகைகள் வாங்குவீர்கள். ஒரு சிலர் வெளிநாட்டுக்குச் சென்று வருவார்கள்.

சனிபகவான் 28.7.2027 முதல் 13.12.2027 வரை வக்ரத்தில் செல்வதால், வாகனத்தைக் கவனமாக இயக்கப்பாருங்கள். முன்கோபம் வேண்டாம். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டை சனி பார்ப்பதால், தைரியமாகச் சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் கௌரவம் கூடும். 12ஆம் வீட்டைப் பார்ப்பதால், திடீர் பணவரவு உண்டு. உறவினர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்குக் குடும்பத்தில் நல்லது நடக்கும். தாம்பத்தியம் இனிக்கும். பணிக்குச் செல்லும் பெண்களுக்கு உயர்ந்த பொறுப்புகள் தேடி வரும். தாய்வழி உறவினர்களுடன் மனக் கசப்புகள் நீங்கும். பூர்விகச் சொத்து கைக்கு வரும்.

பொதுவாகவே இந்த ராசியினருக்குப் பல்வேறு பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் உண்டாகும் காலம் இது. வழக்குகள் சாதகமாகும். தடைப்பட்டு வந்த குலதெய்வப் பிரார்த்தனைகள், வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள்.



## துலாம்

வியாபாரத்தில் அதிரடி லாபம் கிடைக்கும். புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பங்குதாரர்களிடையே அனுசரித்துப் போவீர்கள். ரியல் எஸ்டேட், உணவு, புரோக்கரேஜ் வகைகளால் இலாபம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில், உரிய அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரி பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். ஒருசிலர், அதிகச் சம்பளத்துடன் நல்ல வேலையில் சென்று அமர்வீர்கள். எதிர்பார்த்தபடி பதவி உயர்வு, சம்பளம் உயர்வு எல்லாம் உண்டு. கணினித் துறையில் இருப்பவர்களுக்கு, அயல்நாட்டுத் தொடர்புடைய புதிய நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் வாய்ப்பு கிடைக்கும்.




## நன்மைத்தனத்தைப் பாராட்டுவோம்

சிறந்த ஓவியம் ஒன்றை வரைந்து கொண்டிருந்த ஒருவர் அதை மேலும் மெருகூட்ட கருத்துக்கணிப்பு ஆலோசனை ஒன்றை நடத்தினார். பலரும் குறைகளைத் தொடர்ந்து சுட்டிக்காட்டிக்கொண்டு போனார்கள். அப்போது 'ஓவியத்தில் நீங்களே மாற்றம் செய்யலாம்' என்று தெரிவித்து தூரிகையை அவர்களிடம் கொடுத்தார்.

யாருமே சரிசெய்ய முன்வரவில்லை. இன்றைய உலகப் போக்குகளின் பிரதிபலிப்புகளில் இதுவும் ஒன்று. நன்மைத்தனங்கள் அரங்கேறும் போது பாராட்டாது குறைகளை மட்டும் பெரிதுபடுத்தி மகிழ்பவர்கள் பலர் உள்ளனர். தனக்கென்றால் ஒரு நியாயம். பிறருக்கு வேறு தீர்ப்பு என்பது பலரின் அன்றாட வாழ்வுமுறையாகி விட்டது. இந்த மனநிலைதான் பல முரண்பாடுகளைத் தோற்றுவித்து அமைதியையும், நன்மைத்தனங்களையும் மழுங்கடிக்கிறது. கண்ணிருந்தும் குருடராக, செவியிருந்தும் செவிடராக வாழும் ஆன்மிக ஊனத்திலிருந்து விடுபடுவோம். இயேசு பேச்சிழந்த ஒருவரைப் பேச வைத்தபோது வரவேற்று மகிழ்ந்து இறைபுகழ் கூறாது வாய் கூசாது குறை கூறிய பரிசேயர்களின் மனநிலையை தோலுரித்துக் காட்டுகிறார். வாழ்த்திப் பேச முடியாவிட்டாலும் குறைகூறித் தாழ்த்திப் பேசுவதைத் தவிர்ப்போம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை



நாவாந்துறை கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின், வருடாந்தத் திருவிழா கடந்த சனிக்கிழமை திருச்சொரூபப் பவனியுடன் இடம்பெற்றது. (க-17)



செல்வச்சந்நிதி ஆலயத்தில் கும்பாபிஷேக தின விழா சிறப்புப்பூசையுடன், வீதியுலாவும் இடம் பெற்றன. (க-17)

## பங்குனித்திங்களின் இரண்டாம் உற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

இரண்டாவது பங்குனித்திங்கள் உற்சவத்தை முன்னிட்டு, மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று காலை 5 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து பொங்கல் மற்றும் சிறப்பு வழிபாடுகள் ஆரம்பமாகி இரவு வரை பூசை இடம்பெறும். (க-17)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி,மார்ச் 23

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்மன்குண்டுப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. உயிரிழந்தவர் சென்மன்குண்டு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தனது விவசாய நிலத்தை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக, சட்டவிரோதமான முறையில் அமைத்திருந்த மின்சார வேலியில் சிக்கியதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# ஈழமும் யூதமும்..!

இலங்கையில் இறுதிப்போரில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இடம்பெறாது என்று தீர்க்கமாக அறிவித்துள்ளார் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார. அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது காணாமற்போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவ்விதத் தரவுகளும் நாட்டில் இல்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார். தேசிய மக்கள் சக்தியினர் தம்மை மாற்றத்தின் தரப்பாகக் கூறிக்கொண்டாலும், ஈழத்தமிழர்களின் விடயத்தில் அவர்களால் எந்த மாற்றத்தையும் தந்துவிடமுடியாது என்பதை தமிழ்ச் சமூகம் நீண்டகாலமாக அறிந்திருக்கின்றது. அந்தப் புரிதல் எத்தனை உண்மையானது என்பதற்கு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகளே கட்டியமாகின்றன. ஆனால், அமைச்சரின் கருத்தில் கசப்பான உண்மையொன்றும் வலுவாகவே எதிரொலிக்கின்றது. அது, ஒட்டுமொத்த ஈழத்தமிழ்ச் சமூகத்தின் தோல்வியும் கூட.

1941ஆம் ஆண்டு தொடக்கம் 1945ஆம் ஆண்டுவரை நாஜிக்களால் யூத மக்கள் வகைதொகை இல்லாமல் கொன்று குவிக்கப்பட்டனர். நாஜிக்களின் வதைமுகாம்கள் முழுதும் யூதர்களின் குருதி பெருக்கெடுத்து ஆறாக ஓடியது. அண்ணளவாக 60 இலட்சம் யூதர்கள் இவ்வாறு கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனர். இந்தத் தொகை அக்காலத்தில் ஐரோப்பாவில் வசித்துவந்த யூதர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு. இத்தனை படுகொலைக்குப் பின்னர்தான் இஸ்ரேல் என்ற தேசம் கட்டியெழுப்பப்பட்டது. இன்று இஸ்ரேலின் பிரதான அடையாளங்களில் அதன் கல்லறைத் தோட்டங்களும் முக்கியம் பெறுகின்றன. வதைமுகாமிலும், வதைமுகாமுக்கு வெளியிலும் ஒவ்வொரு யூதர்களும் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை அவர்களின் ஒளிப்படங்களுடன் இஸ்ரேல் தனித்தனியாக ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றது. நாலா பக்கமும் சூழ்ந்து நிற்கும் அரபு நாடுகளுக்கு மத்தியில், இஸ்ரேல் கம்பீரமாக நிலைபெறுவதற்கு வரலாற்றைக் கடத்தும் நுட்பமும் பக்குவமுமே பிரதான காரணம்.

ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணங்களை உரியமுறையில் 'உரியவாறு' பேணுவதில் எமது சமூகம் தோல்வியடைந்துள்ளது. போர்ச்சூழலில் எத்தனை பேர் காணாமல் ஆக்கப்பட்டனர்? என்று கேட்டால், அதற்கான துல்லியமான பதில் எவரிடமும் இருக்க வாய்ப்பில்லை. காணாமல் ஆக்கப்பட்டவரின் பெயர், அவர் எங்கு காணாமல் ஆக்கப்பட்டார்? யாரால் காணாமல் ஆக்கப்பட்டார்? யாரிடம்ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார்? உள்ளிட்ட தகவல்கள் பொதுவான கட்டமைப்பின் கீழ் முழுமையாக இதுவரை இல்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடைய வாக்குமூலங்களிலும், வடக்கு-கிழக்கில் உள்ள எத்தனையோ குடும்பங்களிலும் உள்ள அந்தக் கதைகளை நாம் பொதுமைப்படுத்த வேண்டும். அந்த ஆவணமாக்கலே நீதிக்கான எமது பயணத்தை மேலும் திடப்படுத்தும்-துரிதப்படுத்தும்.


யூதர்களுக்கு எதிரான இனப்படுகொலையை இஸ்ரேல் அரசாங்கம்தான் ஆவணப்படுத்தியது. ஆனால், ஈழத்தமிழர்களின் நிலைமை அவ்வாறு அல்ல என்ற விவாதப்புள்ளி இதில் எழலாம் என்பதை மறுப்பதற்கில்லை. ஒன்றரைக்கோடி மக்கள் தொகையுள்ள யூதர்களால், 60 இலட்சம் பேரின் படுகொலைகளை ஆவணப்படுத்த இயலுமென்றால், குறைந்தபட்சம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தரவுகளை நாங்கள் உரியமுறையில் கட்டமைப்பதொன்றும் அத்தனை சிரமமல்ல. அதற்கான நிதிச்சூழலும் எமக்கு இருக்கின்றபோது, இந்த ஆவணப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ்த்தரப்புகள் சிந்திக்கவேண்டியது அவசியம்.



## பொய்யாமொழி

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு**

**பொருள்:** அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்.




# உணவு விநியோகத்துக்கு எரிபொருள் முன்னுரிமை

கொழும்பு, மார்ச் 23

**மத்திய கிழக்கின் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு மத்தியில் நாட்டின் உணவு விநியோகச் சங்கிலியைப் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் நோக்கில், விநியோகத் துறையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துச் சேவையாளர்களின் எரிபொருள் தேவையைத் துல்லியமாகக் கண்டறிந்து அதற்கான திட்டமிடல்களை முறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதற்கான விசேட தரவு சேகரிப்புத் திட்டத்தை வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது.

இந்தத் தரவுகள் தன்னார்வ அடிப்படையில் திரட்டப்படுகின்றன. முறையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர், இவை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பரிந்துரைகளாக வழங்கப்படவுள்ளன. தொடர்புடைய தரவுகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் https://forms.gle/EPPu4bciG6onEptT9 என்ற கூகுள் படிவ இணைப்பின் ஊடாக விவரங்களை வழங்கமுடியும். ஏற்கனவே அரச முறைமைகளில் பதிவு செய்துள்ளவர்கள், தமது தரவுகளைச் சமர்ப்பிக்க உரிய உத்தியோக பூர்வ தொடர்பாடல் வழிகளைப் பின்பற்றுமாறும் அமைச்சு மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-இ)



# தங்கம் விலை வீழ்ச்சி

கொழும்பு,மார்ச் 23

உலக சந்தையில் தங்கத்தின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாக உள்நாட்டுத் தங்கச் சந்தையிலும் கடந்த மூன்று நாள்களில் குறிப்பிடத்தக்க விலை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய மூன்று தினங்களில் மொத்தமாக தங்கத்தின் விலை சுமார் 29,000 ரூபாவால் குறைந்துள்ளது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை 5,000 டொலர் எல்லைக்குக் கீழ் வீழ்ச்சியடைந்தமையே இந்த மாற்றத்துக்குக் காரணம் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச-இ)

# வெப்பம் உக்கிரம்

கொழும்பு,மார்ச் 23

நாட்டின் சில பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பத்தின் அளவு 'எச்சரிக்கை மட்டத்தை' எட்டக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் மற்றும் அநுராதபுரம், மன்னார் மற்றும் [illegible] ஆகிய மாவட்டங்களில் இந்த 'எச்சரிக்கை மட்ட' வெப்பநிலை உணரப்படும்.

பொதுமக்கள் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

# யாலவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு,மார்ச் 23

யால தேசிய பூங்காவுக்குட்பட்ட கிரிந்த, ஹீன்வல வனஜீவராசிகள் பாதுகாப்புச் சாவடிக்கு அருகில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

கார் ஒன்றில் வந்த குழுவினரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விலங்குகளை வேட்டையாடும் நோக்கிலேயே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-இ)



# 109,410 சுற்றுலாவிகள் 18 நாள்களில் வருகை

கொழும்பு,மார்ச் 23

மார்ச் மாதத்தின் முதல் 18 நாள்களில் இலங்கைக்கு 109,410 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. மேலும், 2026 ஜனவரி 1 முதல் மார்ச் 18 வரையிலான காலப் பகுதியில் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 666,065 ஆகப் பதிவாகியுள்ளது என்றும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)





செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை விரும்பினால் இனவாதத்தைக் கைவிடுங்கள்!



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

**இன நல்லிணக்கத்தை விரும்பும் அரசாங்கமாக இருந்தால் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், உரிமைக் கோரிக்கைகளுக்கும் மதிப்பளித்து, இனவாத அணுகுமுறைகளைக் கைவிடவேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.**

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் இலங்கையின் தேசியக்கொடி அகற்றப்பட்டு, கறுப்புக்கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்புபடுத்தி, 3 மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால், பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு, சுமார் 5 மணித்தியாலங்கள் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

காலனித்துவ ஆட்சியிலிருந்து, இலங்கை சுதந்திரமடைந்த நாள் சிங்கள மக்களால் சுதந்திர நாளாகக் கொண்டாடப்பட்டு வந்தாலும், ஆரம்பம் முதலே தமிழர்களால் கரிநாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் வேரூன்றியுள்ள சிங்கள பௌத்த பேரினவாத மனோபாவம், தமிழர் தேசத்தை இன அழிப்பின் மூலம் அழிக்கும் முனைப்பிலேயே தொடர்கின்றது.

தமிழ்மக்களின் அரசியல் விருப்பங்கள் மதிக்கப்படாதவரை, இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்களின் கரிநாளாகவே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்.

77 ஆண்டுகளாகச் சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்கள், இலங்கையின் ஒற்றையாட்சிக்குள் வாழமுடியாது என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

நடைமுறையில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும், வளங்களைச் சுரண்டியும், சிங்கள மயமாக்கலை முன்னெடுத்தும் முன்னைய அரசாங்கங்களைப் போலவே உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மாணவர்களையும், மக்களையும் ஒடுக்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

தமிழ்மக்களின் உணர்வுகளை மதிக்காத அநுர அரசாங்கத்தின் இனவெறி நிறைந்த அடக்குமுறை நடவடிக்கைகளை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது-என்றுள்ளது. (க-66)

# மகாவலி அதிகாரசபையை வடக்கிலிருந்து வெளியேற்றுக

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் 'அபிவிருத்தி' என்ற பெயரில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு மற்றும் தமிழ் இன அடையாள அழிப்பு என்பவற்றை முன்னெடுக்கும் மகாவலி அதிகாரசபையை உடனடியாக வடக்கிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1988ஆம் ஆண்டு முதல் மகாவலி அதிகார சபை அரச அனுசரணையுடன் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளைத் திட்டமிட்டு அபகரித்துள்ளது.

தமிழ்க் கிராமங்களின் பெயர்களைச் சிங்களப் பெயர்களாக மாற்றி, வரைபடத்திலிருந்து தமிழ் அடையாளங்களை நீக்கியுள்ளது. திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, தமிழர்களைத் அவர்களின் சொந்த மண்ணிலேயே சிறுபான்மையினராக்கும் இனப்பரம்பல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எமது மக்களுக்கு மரண வலியைத் தருகின்ற இந்த மகாவலி அதிகாரசபை எமது பகுதிகளுக்குத் தேவையில்லை.மகாவலி நீர் வராத இடத்துக்கு அதிகாரசபை எதற்கு? அவர்கள் உடனடியாக வடக்கிலிருந்து வெளியேறவேண்டும்-என்றார். (ச-246)

# பருத்தித்துறையில் பேருந்துகள் போட்டி

## பயணிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ்ப்பாணம், பருத்தித்துறை இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகளுக்கு இடையே நிலவும் போட்டித் தன்மை காரணமாக நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு நோக்கிப் பயணிக்கவிருந்த பயணிகள் தாமதத்தைச் சந்தித்துள்ளனர்.

பருத்தித்துறை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இரவு 8 மணிக்குக் கொழும்பு நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த இ.போ.ச. பேருந்துக்கு முன்பாக, தனியார் சொகுசுப் பேருந்து ஒன்று குறுக்காக நிறுத்தப்பட்டிருந்தது. தனியார் பேருந்து சுமார் 10 நிமிடங்களுக்கும் மேலாக நகராமல் அதே இடத்தில் தரித்து நின்றுள்ளது. இ.போ.ச பேருந்துச் சாரதி பலமுறை ஒலி எழுப்பியும் சமிக்ஞைகள் காட்டியும் தனியார் பேருந்துச் சாரதி வழியை விடவில்லை.

இரவு நேரத்தில் நீண்ட தூரப் பயணத்தை மேற்கொள்ளவிருந்த பயணிகள், இந்தப் போட்டியால் பேருந்து நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இதுதொடர்பில் இ.போ.ச. பேருந்துச் சாரதி உடனடியாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி ஊடாக முறைப்பாடு வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதற்கு முன்னரே, குறித்த தனியார் சொகுசுப் பேருந்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது. பேருந்துகளுக்கிடையிலான போட்டியால் இ.போ.ச. பேருந்து சுமார் 30 நிமிடத்துக்குப் பின்னரே கொழும்பு நோக்கிப் பயணித்தது. (க-100)



# ரயில் கடவைப் பாதை மூடல் மக்கள் எதிர்த்துப் போராட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ். அன்னசந்திர வீதியில் அமைந்துள்ள ரயில் கடவையூடான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதை எதிர்த்து, அந்தப் பகுதி மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாதை திடீரென மூடியதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சிரமங்கள், அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கு உடனடித் தீர்வு கோரி, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (க-66,27)



# நல்லூர்தேரடிச் சித்தரின் 111ஆவது குருபூசை நிகழ்வு



யாழ்ப்பாணம்,மார்ச் 23

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 111ஆவது குருபூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சிறப்பு அபிஷேக வழிபாடுகளுடன் [illegible] தனைப் பாடல்கள் பண்ணுடன் ஓதப்பட்டது. தொடர்ந்து குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன. சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளர் அ.விக்னேஸ்வரன், தமிழ்ப் புலமையாளர் கே.எஸ்.சிவஞானராஜா, ஆசிரியர் செ.லோகேஸ்வரன் மற்றும் அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரானுக்குள் ஊடுருவினால்

# அமெரிக்கப் படைகளின் குருதி பெருக்கெடுக்கும்!

## ஈரானிய இராணுவம் பகிரங்க மிரட்டல்

## ட்ரம்பை பயங்கரவாதி என்றும் அறிவிப்பு

தெஹ்ரோன், மார்ச் 23

ஈரானிய மண்ணில் அமெரிக்கா கால்வைத்தால், அந்தப் படைகள் வகை தொகை இல்லாமல் கொன்று குவிக்கப்படும் என, ஈரானிய இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் மீது தரைவழி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிபர் ட்ரம்ப் பரிசீலனைகளை மேற்கொண்டு வருகின்றார். இத்தகைய பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியிலேயே, ஈரானுக்குள் அமெரிக்கப் படைகள் ஊடுருவினால், அவர்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்படுவார்கள் என்று ஈரானிய இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் ஈரானிய இராணுவம் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கப் படைகள் ஈரானுக்குள் ஊடுருவுவது என்பது எமது சிவப்புக் கோட்டை மீறுவதாகவே அமையும். அவ்வாறு மீறித் தாக்குதல் நடத்தினால், ஒவ்வொரு தாக்குதலுக்கும் நாங்கள் ஆச்சரியமான முறையில் பதிலடி கொடுப்போம். ஈரானின் துணிச்சலான படைகள் எதற்கும் தயாராகவே உள்ளன.

எங்களின் எரிசக்தி உட்கட்டமைப்பைத் தாக்கினால், இந்தப் பகுதியில் உள்ள அனைத்து எரிசக்தி உட்கட்டமைப்புகளும் செயலிழந்து போகும். பயங்கரவாதி ட்ரம்ப், இந்த விடயத்தில் ஏதேனும் தவறு செய்தால், அவருக்கு ஆச்சரியங்களை நாங்கள் காட்டுவோம்-என்றுள்ளது. (ம)

# தமிழகத்தில் பா.ஜ.க. முற்றாகச் சரணடையும்

சென்னை, மார்ச் 23

தமிழகம் என்னும் தமிழ்ப் பெருங்கடலில் பா.ஜ.க.வால் காலூன்ற முடியாது என, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் காதர் மொய்தீன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற முஸ்லிம் லீக் கட்சியின் மாநாட்டில் காதர் மொய்தீன் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் இம்முறை ஐந்து முனைப் போட்டி உள்ளது. புதிய கூட்டணிகள் உருவெடுப்பது ஜனநாயக மரபுதான். எனவே, புதிய கூட்டணிகளை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தி.மு.க. தலைமையிலான கூட்டணி மிகவும் வலிமையான நிலையில் உள்ளது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் 80 வீதமான மக்கள் மிகவும் திருப்தியான நிலையில் உள்ளனர். ஆதலால், தி.மு.க.வுக்கு எதிராக மக்கள் வாக்களிப்பதற்கு எந்தவிதமான நியாயமான காரணங்களும் இல்லை-என்றார். (ம)



# உலகளாவிய நிர்வாகத்தில் தலையிட அனுமதியில்லை!

## ட்ரம்பைக் கண்டிக்கிறார் இத்தாலிய பிரதமர்

உரோம், மார்ச் 23

அமெரிக்க அதிபருக்குரிய வேலையை மட்டுமே அதிபர் ட்ரம்ப் பார்க்கவேண்டும் என்று, இத்தாலியப் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி கண்டித்துள்ளார்.

மத்திய கிழக்குப் போரில் நேட்டோ நாடுகள் உதவி செய்யாத நிலையில், அந்த நாடுகளை அதிபர் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்திருந்தார். இதையடுத்தே, அதிபர் ட்ரம்பின் நிலைப்பாட்டையும், அவர் வெளிப்படுத்திய கருத்துகளையும் இத்தாலியப் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர் ட்ரம்ப், அமெரிக்காவுக்கு மட்டுமே அதிபர் என்பதை அவர் நினைவில் வைத்திருக்க வேண்டும். இத்தாலி, பிரான்ஸ் அல்லது ஜேர்மனியின் அதிபர்களுக்குரிய அதிகாரத்திலும், கடமையிலும் அவர் தலையிடக்கூடாது.

அதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அதை நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம்.

ஈரானுடன் அமெரிக்கா முன்னெடுத்துவரும் அவசியமற்ற போர் காரணமாகவே, ஹோர்மூஸ் நீரிணை பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. ஈரானுக்கு எதிரான இந்த நியாயமற்ற போரில் நாங்கள் ஒருபோதும் பங்கெடுக்க மாட்டோம். இந்தப் போரால் தீங்கான விடயங்களைத் தவிர, வேறு எதுவும் கிடைக்காது - என்றார். (ம)

# போர நறுத்தத்துக்கான நிபந்தனைகள் தளராது

## ரஷ்யா திட்டவட்டம்



கீவ், மார்ச் 23

உக்ரைனில் போரைக் கைவிடுவதற்காக தம்மால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்று ரஷ்யா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பலமுறை முயற்சி செய்தும் இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை. சில தினங்களுக்கு முன்னர் ரஷ்ய அதிபர் புடினுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதும், உக்ரைனில் போர் நிறுத்தம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார்.

இதையடுத்தே, "உக்ரைனில் இராணுவ நடவடிக்கையைக் கைவிடுவதற்குத் தயார். ஆனால், தமது அடிப்படை நிபந்தனைகள் ஏற்கப்படவேண்டும்" என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் லாவ்ரோவ் கூறியுள்ளார். (ம)

# தி.மு.க.வை வீழ்த்துவதற்கு பா.ஜ.க. தலைமையில் சதி

## தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்ச் 23

தி.மு.க.வை வீழ்த்துவதற்கு, பா.ஜ.க. தலைமையில் சதிகள் இடம்பெறுகின்றன என்று, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க.வின் தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

தி.மு.க.வை வீழ்த்துவது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்பதைப் புரிந்துகொண்ட சில தரப்புகள், பொய்ப் பரப்புரைகள் மூலமும், கீழ்த்தரமான வேலைகள் ஊடாகவும் எம்மை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு எத்தனிக்கின்றன. எத்தனையோ சவால்களை எதிர்கொண்ட எம்மால், இந்தச் சவால்களையும் வெற்றி பெற முடியும். தமிழகத்துக்கும் புதுடில்லிக்கும் இடையிலான நேரடி மோதலாகவே எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தல் அமைந்துள்ளது. இதைநான் பலமுறை கூறியுள்ளேன். எதிர்வரும் தேர்தல் சாதாரணதொரு தேர்தலாக நாங்கள் கருதக்கூடாது-என்றுள்ளது. (ம)

# ஹோர்மூஸ் நீரிணையை விடுவிக்காவிடில் பேரழிவு

## ஈரானுக்கு ட்ரம்ப் மிரட்டல் இன்றுவரை அவகாசம்

வொஷிங்டன், மார்ச் 23

ஹோர்மூஸ் நீரிணையைத் திறக்காவிடில், ஈரானுக்குப் பேரழிவுகள் ஏற்படும் என்று மிரட்டல் விடுத்துள்ள ட்ரம்ப், அந்த நீரிணையைத் திறப்பதற்காக இன்றுவரை அவகாசமும் வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

ஹோர்மூஸ் நீரிணையை முடக்கி வைத்திருக்கும் ஈரானின் நகர்வை நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த நீரிணையை முழுமையாகவும் எவ்வித அச்சுறுத்தலும் இன்றியும் ஈரான் திறக்கவேண்டும். இல்லையேல், ஈரானின் மின் நிலையங்கள் பலவற்றை நாங்கள் தாக்கி அழிப்போம் -என்றுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தொகை எரிபொருளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது



கிளி.,மார்ச் 23
கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,220 லீற்றர் பெற்றோல் மற்றும் 530 லீற்றர் டீசல் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பகுதியில் இராமநாதபுரம் பொலிஸார் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது தனியார் ஒருவருக்குச் சொந்தமான இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த எரிபொருள் தொகையைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட எரிபொருள் மற்றும் சந்தேகநபரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ச-113)



யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச)

## ஓடக்கரையில் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 23
பருத்தித்துறை நகரை சிறப்பான முறையில் கட்டியமைக்க நாமெல்லாம் கைகோர்ப்போம் என்ற தொனிப்பொருளில், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வி.டக்ளஸ் போல், தொடர்ச்சியாக மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இதன் தொடர்ச்சியாக ஆறாவது மக்கள் சந்திப்பு பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட எட்டாம் வட்டாரத்தில் உள்ள ஓடக்கரை சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நகரசபையின் செயற்பாடுகள், மக்களின் முறைப்பாடுகள் மற்றும் கருத்துகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன. (க-100)



## 5ஆம் ஆண்டு நினைவேந்தல்



அமரர் சிவபாக்கியம் நல்லம்மா
23.03.2026

ஆலம் விழுதுகள் போல ஆயிரம் உறவுகள் இருந்தும்
அம்மா என்ற உறவின்றி அநாதையாய் நாம் நிற்க
எங்களை உயர்த்தி வைத்த நீங்கள் எங்கே அம்மா!
ஆறுதல் கூற யாருமற்று பதைத்து நிற்கிறோம் அம்மா.

குடும்பத்தினர்.
(CS 31497) A

## மரண அறிவித்தல்



**கந்தையா தங்கராசா**
(ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்)

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.07, வேலப்பர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கராஜா (ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த 21.03.2026 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற இரத்தினம் - பகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலர் (சீத்தா) அவர்களின் அன்புக் கணவரும், எவோன்ஷன் (லண்டன்), ஜெரூஷ்சன் (இலண்டன்), ஆன்குளோறியா எப்சியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரண்ஜாவின் (லண்டன்) அன்பு மாமனாரும், ஜோஎல்லன் எறினின் (லண்டன்) அன்பு பேரனாரும், ஓய்வுபெற்ற அதிபர் தம்பிமுத்து, இராசம்மா, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக வசந்தபுரம் எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபையின் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தொலைபேசி:077 432 3914 குடும்பத்தினர்.
(CS 3[illegible])

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### வவுனியா பேருந்து நிலையத்தில் சிற்றுண்டிச்சாலையை நடாத்துதல்

01. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வவுனியா பேருந்து நிலைய வளாகத்தில் பின்வரும் சிற்றுண்டிச்சாலையை ஒரு வருடத்திற்கு நடாத்தி செல்வதற்காக திணைக்களத்தின் பெறுகை குழுவின் தலைவரினால் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| பெறுகை செயற்பாடு | மனுப்பிணைக் கட்டணம் (பணமாக செலுத்த வேண்டும்) |
|---|---|
| வவுனியா பேருந்து நிலையத்தில் (A Block) சிற்றுண்டிச்சாலையை நடாத்துதல் | 145,000.00 |
| வவுனியா பேருந்து நிலையத்தில் (B Block) சிற்றுண்டிச்சாலையை நடாத்துதல் | 200,000.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. முழுமையான விபரங்கள் அடங்கிய மனு ஆவணங்களின் தொகுப்பை உதவிப் பணிப்பாளர் (கொள்முதல்), தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் அல்லது நிர்வாக முகாமையாளர், புதிய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பித்து மற்றும் மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.3,500.00 பணமாகச் செலுத்தி 2026.03.23 ஆம் திகதி முதல் 2026.04.06 ஆம் திகதி வரை மு.ப.10.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2026.04.07 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மேலும் மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க முடியும். மேலதிக விபரங்களை கொள்முதல் பிரிவில் 011 2 303 969 பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல.241, பார்க் வீதி,
கொழும்பு 05.
www.ntc.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கனடாவில் இருந்து நேரடியாக தருவிக்கபட்ட தரமான கொண்டைக்கடலை (Chickpeas) இலங்கையில் மொத்த விற்பனைக்கு உண்டு.

கொழும்பு விலை 1Kg- Rs.305
யாழ்ப்பாண விலை 1 Kg-Rs.320
மட்டக்களப்பு விலை 1 Kg-Rs.320
திருகோணமலை விலை 1 Kg- Rs.320

மேலதிக விபரங்களுக்கு:
கனடா -+1 647 295 6100
இலங்கை -077 33 66 373

(CS 31492)A

## பணியாளர்கள் தேவை

1. ஆய்வுகூட உதவியாளர்
   - தகைமை :- க.பொ.த (சா/த) சித்தி
   - வயது :- 40 வயதுக்குட்பட்டோர்
2. மாணவர் விடுதி மேற்பார்வையாளர் (பெண்)
   - தகைமை :- க.பொ.த (சா/த) அல்லது அதற்கு மேற்பட்டது
   - வயது :- 30 - 60 வயதுக்குட்பட்டோர் (விடுதியில் தங்கியிருந்து வேலை பார்ப்பவர் விரும்பத்தக்கது)
3. சுத்திகரிப்பு தொழிலாளர் - பெண்
   - வயது :- 20 - 55 வயதுக்குட்பட்டோர்


விண்ணப்ப முடிவு திகதி :- 31.03.2026

விண்ணப்பங்களை அலுவலக நாட்களில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(cr.47258) N-1 (cs.60723) N-1


## கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்
06 . 03 . 1935

இறைவன் அடியில்
14 . 03 . 2026

### செல்வநாயகி ராஜலிங்கம்

(மணி - நாயன்மார்கட்டு)


எம்மை பண்பாகவும் அன்பாகவும் பாசமாகவும்
அரவணைத்த எமது குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமான
உங்களை இழந்து தவிக்கின்றோம்!
உங்களது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2026) செவ்வாய்க்கிழமை நோர்வேயில் (Bergen) நடைபெறும்.

பேரன்புடன்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரி, சகோதரர், மைத்துனிகள், பெறாமக்கள்.**

(cs.61044) (N-1)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.02.2026 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தெய்வம்

**அமரர்**
**பொன்னம்பலம் சிறிகந்தராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.03.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

1ஆம் கட்டை, கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CS 31495)A

## மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 11 . 1979

மறைவு
21 . 03 . 2026

### சிவலிங்கம் சிவகஜனி

விவேகானந்த வீதி, மஞ்சத்தடி தெற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் தற்போதைய வதிவிடமாகவும், ஒட்டுசுட்டான் சிவன் கோவிலடியை முன்னைய வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவகஜனி கடந்த 21.03.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முன்னைநாள் ஒட்டுசுட்டான் "சிவன் ஸ்ரோர்ஸ்" உரிமையாளர் சிவலிங்கம் அன்னலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மகேஸ்வரி, மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியரின் பேர்த்தியும், சிவகரன், சிவகஜன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜனனி மற்றும் சனார்த்தனியின் அன்பு மைத்துனியும், நிலானன், அட்சயன், யஸ்வினா, சஸ்வினா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2026) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராமமூர்த்தி (வைத்தியர்) சந்திரசேகரம் (சந்திரன்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடி வீதியை புகுந்த இடமாகவும் சுவிஸ்லார்ந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமமூர்த்தி சந்திரசேகரன் (சந்திரன்) கடந்த 19.03.2026 வியாழக்கிழமை இயற்கையை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமமூர்த்தி (வைத்தியர்) - அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாகாந்தியின் ஆருயிர் கணவரும், விநித்தா, தனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாசனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருந்தவநாதன், பவலன், குகன் மற்றும் மகேந்திரன் (கொலண்ட்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தேவியின் பெறாமகனும், கணேசமூர்த்தி, சரோஜினிதேவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சொர்ணகாந்தி, சிவகுமார், விஜயகுமார், சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திரலிங்கம், வத்சலாதேவி, உதயகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் KREMATORIUM NORDHEIM, KÄFERHOLZ SIRASSE 101,8046 ZÜRICH (சுவஸ்லாந்தில்) நடைபெறும்.

நாளை மஞ்சத்தடி முருகன் கோவிலடி இணுவிலில் அமைந்துள்ள இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

கோவில் வீதி,
மஞ்சத்தடி இணுவில்.


தகவல்
குடும்பத்தினர்.

CS 61045 N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலைக் கேபிள்களில் சிக்கி பிளமிங்கோ பறவைகள் பலி!







## மன்னாரில் சோகம்

மன்னார், மார்ச் 23

மன்னார் மாவட்டத்திற்கு வருகை தரும் வெளிநாட்டுப் பறவை இனமான பிளமிங்கோ எனப்படும் பூநாரைகள், காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்லும் அதிவலு கொண்ட மின் கேபிள்களில் சிக்கி விபத்துக்குள்ளாகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளாகிய பறவைகளில் இரண்டு உயிரிழந்த நிலையிலும், ஒன்று பலத்த காயமடைந்த நிலையிலும் மன்னார் மாவட்ட வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பறவைக்கு அவசர மருத்துவச் சிகிச்சை அளிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மன்னார் வங்காலை பறவைகள் சரணாலயப் பகுதி ஊடாகச் செல்லும் காற்றாலை மின்சாரக் கேபிள்களிலேயே இந்தப் பறவைகள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

தற்போது வெளிநாட்டுப் பறவைகள் மன்னார் தீவுப் பகுதிக்கு அதிகளவில் வருகை தரும் காலமாகும். பிளமிங்கோ போன்ற அழகிய பறவைகளைக் காண்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மன்னாருக்குப் படையெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், காற்றாலை மின்சாரக் கட்டமைப்புகள் பறவைகளின் உயிருக்கு அச்சுறுத்தலாக மாறியிருப்பது சூழலியலாளர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ச-56,213)

# ஏற்றுமதித் துறையாலேயே வடக்கு தன்னிறைவடையும்

## ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச் 22

வடக்கு மாகாணத்தின் நிலையான வளர்ச்சிக்கு ஏற்றுமதியை மையமாகக் கொண்ட தொழிற்றுறைகளே அவசியம்.

இடைத்தரகர்களின் சுரண்டலுக்கு இனி இடமளிக்க முடியாது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடக்குக்கான தொழிற்றுறைகள் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவிக்கையில்,

அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிக் கடன்கள் 'முதலில் வருபவருக்கே முன்னுரிமை' என்ற அடிப்படையில் வழங்கப்படுவதால், ஆவணங்களைத் தயார் செய்வதற்குள் ஏனைய மாகாணத்தவர் அவற்றை முந்திக்கொண்டு பெற்றுக்கொள்கின்றனர்.

வடக்கு மாகாணத்திற்கெனத் தனியான கடன் ஒதுக்கீட்டை அரசாங்கத்திடம் கோரவுள்ளோம்.

தொழில்முயற்சியாளர்களுக்குத் தேவையான திட்ட ஆவணங்களைத் தயாரிக்கப் பல்கலைக்கழகங்கள் ஊடாக உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் உள்ளூர் பயணிகளுக்கெனத் தனி முனையத்தை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

திருகோணமலையிலிருந்து வடக்கு இலகுவாகப் பயணிக்க இந்தப் பாலத்தை அமைப்பதற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்திற்கு வரும் முதலீட்டாளர்கள் பல்வேறு திணைக்களங்களுக்கு அலைவதைத் தவிர்க்க, அனைத்துச் சேவைகளையும் 'ஒரே கூரையின் கீழ்' வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.


இது நடைமுறைக்கு வரும்போது முதலீட்டாளர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமையும்- என்றார். (க-66)

# கபடிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

வேலணைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேசமட்ட கபடிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் பாரதி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ச-9)



# பயிற்சிப்பட்டறை




யாழ்ப்பாணம்,மார்ச் 23

முல்லைத்தீவு மாவட்டச் செயலக மத்தியஸ்த அலகின் ஏற்பாட்டில் மத்தியஸ்த சபை உருவாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான தெளிவூட்டும் பயிர்ச்சிப்பட்டறை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கின் வளவாளராக மத்தியஸ்த சபையின் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் ச.லக்ஸ்மன், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் த. மயூரதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப்போட்டி





கொழும்பு,மார்ச் 23

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகமும் எழுகை பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பும் இணைந்து நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி புதுக்குடியிருப்புப் பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டிகளில் ஓட்டப் போட்டிகள் குண்டு போடுதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல் உள்ளிட்ட பல்வேறு போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் இ.விஜயகுமார், உதவிப் பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர், உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்...

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாளைமறுதினம் 25 ஆம் திகதி 37 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசலுடன் கப்பல் நாட்டை வந்தடையும். உலக சந்தையில் நிலவும் விலை அதிகரிப்பு உள்நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போதும் நட்டத்திலேயே செயற்படுகின்றது. நேற்று (நேற்றுமுன்தினம்) மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்புக்கு மத்தியிலும், ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாவையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு 20 பில்லியன் ரூபாவைச் செலவிடவேண்டியுள்ளது. இந்த முழுச் சுமையையும் அரசாங்கம் ஏற்க நேர்ந்தால், ஆண்டுக்கு கூடுதலாக 1.5 பில்லியன் டொலர் செலவுச் சுமையை அரசாங்கம் ஏற்க வேண்டியிருக்கும். அவ்வாறு நடந்தால் எண்ணெய் மட்டுமல்ல, ஒட்டுமொத்த பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படலாம்.

ஏப்ரல் மாதத்தில் வரவிருந்த 30 ஆயிரம் தொன் கச்சா எண்ணெய் கப்பல் நாட்டுக்கு வராது. அதற்கு பதிலாக ஜூன் மாதத்தில் 30 ஆயிரம் தொன் கச்சா எண்ணெய் கப்பல் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போரை யாராலும் கணிக்க முடியாது. ஈரான் மீதான போர் கூடிய விரைவில் முடிவுக்கு வரும் என்பதே எங்கள் நம்பிக்கை. போர் நாளை முடிந்தாலும், பொருளாதாரம், எண்ணெய் உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பில் ஏற்படும் தாக்கங்களைக் கருத்தில் கொள்ளும்போது, நமது பொருளாதாரத்தில் போரின் தாக்கம் ஒரே இரவில் முடிந்துவிடாது. இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு நாடாக நாம் நிச்சயமாக எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். இதற்கு தீர்வாகவே கியூ.ஆர். குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது. வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருந்தாலும், அனைவரும் இதை உணர்வுபூர்வமாக சிந்தித்து அதற்கேற்ப செயற்பட வேண்டும். எரிசக்தி நுகர்வைக் குறைக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது-என்றார். (அ-எ-இ)

## எரிபொருள்விலை...

ஒக்டோன் 92 ரகப் பெற்றோல் 81 ரூபாவாலும், ஒக்ரோன் 95 ரகப் பெற்றோல் 90 ரூபாவாலும், ஓட்டோ டீசல் 79 ரூபாவாலும், லங்கா சுப்பர் டீசல் 90 ரூபாவாலும், மண்ணெண்ணெய் 60 ரூபாவாவும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புகள் ஏற்கனவே இருந்த நிலையில் இந்த விலை உயர்வால் அவை லட்சக்கணக்கில் இலாபம் பார்த்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-17)

## எங்களை...

துள்ளார்: "ஈரானின் மின் நிலையங்கள் தாக்கப்பட்டால், பிராந்தியம் முழுவதும் உள்ள முக்கியமான எரிசக்தி மற்றும் எண்ணெய் உட்கட்டமைப்புகள் 'சட்டபூர்வமான இலக்குகளாகக்' கருதப்பட்டு, அவை மீள முடியாத வகையில் அழிக்கப்படும்" என காலிபாஃப் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து சுதந்திரம் 48 மணி நேரத்துக்குள் முழுமையாக மீட்டெடுக்கப்படாவிட்டால், ஈரானின் மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சனிக்கிழமை விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்தே ஈரானிடமிருந்து இந்த பதில் வந்துள்ளது.

இத்தகைய தாக்குதல்களால் உலக சந்தையில் எண்ணெய் விலைகள் நீண்ட காலத்துக்கு உயரும் என்று மொஹமட் பாகர் காலிபாஃப் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## இலங்கை...

இந்தக் குழு ஆராயும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மாதாந்த செய்தியாளர் சந்திப்பில், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் மோதல்களால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்ட அடுத்த கட்ட மீளாய்வுகள் என்பன தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அண்மையில் இலங்கைக்குச் சென்றிருந்தார். 'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட மிகமோசமான தாக்கத்துக்கு மத்தியிலும் இலங்கையின் மறுசீரமைப்பு செயன்முறையில் குறிப்பிடத்தக்க களவு முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது என்று அவர் அங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோன்று இலங்கையின் பொருளாதாரமானது ஒப்பீட்டளவில் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்து வருகிறது. இருப்பினும் தற்போது மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள மோதல்களினால் வர்த்தகம், பணப்பரிமாற்றம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் சார்ந்து இலங்கை கணிசமான பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய நிலையில் இருக்கிறது. இது இலங்கையின் அடுத்தகட்ட பொருளாதார நகர்வில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இலங்கை செல்லும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு, விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் தொடர்பான 5 ஆம் மற்றும் 6 ஆம் கட்ட மீளாய்வைப் பூர்த்திசெய்வதையே பிரதான இலக்காகக் கொண்டிருக்கும்.

இந்தக் கலந்துரையாடல்களின் ஓரங்கமாக மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு எவ்வாறான தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்பது பற்றியும் அதிகாரிகள் விரிவாக ஆராய்வர். அந்த அதிகாரிகள் குழுவினர் திரும்பிச்செல்லும்போது இலங்கையின் பொருளாதார நிலைவரம் மற்றும் இலங்கைக்குத் தொடர்ந்து எவ்வாறு உதவமுடியும் என்பது தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய மதிப்பீட்டைத் தம்வசம் வைத்திருப்பர்-என்றார். (அ-எ-இ)

## பாடசாலைகளை...

தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- முதலாம் தவணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. அதுவரையில் பாடசாலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. தற்போதைய சூழலில் வாரத்தின் புதன்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது. ஏனைய நான்கு நாள்களும் பாடசாலைகள் வழமை போன்று இயங்கும்.

கடந்த காலங்களில் நிலவிய நிச்சயமற்ற தன்மையால் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதனால் மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு வாரத்துக்கு 4 நாள்கள் பாடசாலைகளைத் தடையின்றி நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாடசாலைகளை முழுமையாக மூடுவதற்குப் பதிலாக, மாற்று வழிமுறைகள் மூலம் நிலைமையைக் கையாள அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் -என்றார். (அ-எ-இ)

## வதந்தி...

செய்யப்பட்டுள்ளார். நாட்டில் எரிபொருள் இல்லை எனக் கூறி வெளிநாட்டவர்கள் வருகையைத் தடுத்தும், சுற்றுலாத் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் பொதுமக்களைத் தூண்டும் வகையில் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்த குற்றச்சாட்டிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வத்தேகம பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## விரிவுரையாளர்...

ரையாளரான தயாளினி திலீபன் (வயது -54) கொலை செய்யப்பட்டு, அவரது உடல் தனங்களப்புப் பகுதியில் பற்றைக் காட்டுக்குள் இருந்த மீட்கப்பட்ட நிலையில், அவரது மகள் மற்றும் மருமகன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைகளில் மகள் கால்களை அழுத்திப் பிடிக்க, மருமகன் கழுத்தை நெரித்துக் கொலை செய்தமை கண்டறியப்பட்டுள்ளது. கொலை செய்த பின்னர் சடலத்தை தனங்களப்புப் பகுதியில் பற்றைக்காட்டுக்குள் வீசிவிட்டுத் திருகோணமலைக்குத் தப்பிச் சென்றிருந்த நிலையில், சந்தேகநபர்கள் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நேற்று யாழ்ப்பாணம் பதில் நீதவானிடம் முற்படுத்தப்பட்ட போது, சந்தேகநபர்களை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அதேவேளை, சந்தேகநபரான இளைஞனின் சிறுநீர் மாதிரிப் பரிசோதனையில் சந்தேகநபர் கஞ்சா நுகர்ந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையில் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## எரிபொருள்...

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் மின்சாரப் பாவனையை மட்டுப்படுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாட்டுக்கு நாளையும், நாளைமறுதினமும் வரவிருந்த கச்சா எண்ணெய்க் கப்பல் வரவில்லை. நாளைமறுதினம் வரையே கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

இதனால் மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் எண்ணெய் மற்றும் நெப்தா எரிபொருள் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். இது ஒரு பெரும் பிரச்சினையாகும். அடுத்தமாதம் 12, 13 திகதிகளில் எரிபொருள் கப்பல் ஒன்று வரவுள்ளது. ஆனால் நெப்தா எரிபொருள் வராது.

ஆகையால் நெப்தாவுக்குப் பதிலாக டீசலைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். இனிவரும் காலங்களில் இரவு நேரங்களில் டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். அதனால் ஒரு விளக்கையாவது அணைத்து, வீதி விளக்குகளையும் அணைத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்தால் மாத்திரமே எம்மால் நிலைமையைச் சமாளிக்க முடியும். பொதுமக்கள் இதில் தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது-என்றார். (அ-எ-இ)

## பஸ்...

யில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரெண்டா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து நேற்று பஸ் உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## ஆணொருவர்...

துர்நாற்றம் வீசியுள்ளது. அதையடுத்து அந்தப் பகுதி மக்கள் வீட்டில் இருந்த நபரின் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

உறவினர்கள் வீட்டுக்குச் சென்று வீட்டைத் திறந்து பார்த்தபோது, அந்த வீட்டில் வசித்த நபர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். அதையடுத்து மருதங்கேணிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 153 தொலைபேசி இலக்கங்கள் QR முறைகேட்டில் அடையாளம்

கொழும்பு,மார்ச் 23
எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகப்படுத்தப் பட்ட QR குறியீட்டு முறைமையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 153 தொலைபேசி இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று அரசாங்க ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் உத்தரவிடப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் சட்டவிரோதமான முறையில் எரிபொருளைச் சேமித்து வைத்திருந்த பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவர்களுக்கும் எதிராகச் சட்டநடவடிக்கை பாயும் என்றும் அமைச்சர் எச்சரித்தார். (ச-இ)

## ஐஸ் போதைப்பொருளுடன் சுப்பர்மடத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 23
யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 2 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைதுநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27-26)

# விமானக் கட்டணங்கள் இரு மடங்காக உயர்வு!

## நெருக்கடியில் எயார்லைன்ஸ்

மத்திய கிழக்கில் தொடரும் போர் பதற்றங்கள் காரணமாக சர்வதேச சந்தையில் ஜெட் எரிபொருள் விலை அதிரடியாக உயர்ந்துள்ளதால், விமானக் கட்டணங்கள் முந்தைய நிலையை விட இரண்டு மடங்காக அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ஜனிதா ருவன் கொடித்துவக்கு தெரிவிக்கையில்,

சர்வதேசச் சந்தையில் ஒரு கலன் ஜெட் எரிபொருளின் விலை 2.25 டொலரிலிருந்து சுமார் 4 டொலராக உயர்ந்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி 28 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் இருந்த நிலையில், தற்போது சுமார் 21 நாள்களுக்குத் தேவையான இருப்பு மாத்திரமே இலங்கையிடம் உள்ளது.

எரிபொருள் விலை உயர்வு தேசிய விமானச்சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே பழைய விலையில் ரிக்கெட்டுகளை வாங்கிய பயணிகளிடம் மேலதிக கட்டணத்தை வசூலிக்க முடியாது என்பதால் நிறுவனம் நட்டத்தைச் சந்திக்க நேரிடும் - என்றார். (ச-இ)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச் 23
கோண்டாவில் மாவடி ஸ்ரீ வீரபத்திரர் பெருமானைத் துதிக்கும் பக்தி இசைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோண்டாவில் மாவடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலய முன்றலில் நடைபெறும் நிகழ்வில் நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் முதல் இறுவட்டினைப் பெற்று ஆசி வழங்கவுள்ளார். (ச-100)

### பதுக்கிய...

களஞ்சியசாலையில் பதுக்கப்பட்டிருந்த எரிபொருள்களே மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

4 ஆயிரத்து 240 லீற்றர் டீசல், 840 லீற்றர் பெற்றோல், 390 லீட்டர் மண்ணெண்ணெய் என்பனவே யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைநீதிமன்றில்முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26)

### சொகுசு...

பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சொகுசு பஸ் வவுனியாவை அடைந்தபோது, அந்த நபரின் நிலை தொடர்பாக சந்தேகம் அடைந்த பஸ் நடத்துநர், சாரதி ஆகியோர் பஸ்ஸை வவுனியா மருத்துவனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தமையை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு, கல்முனையைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் புத்தளத்தில் பஸ்ஸில் ஏறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## பங்குனித் திங்கள் பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 23
பங்குனித் திங்கள் உற்சவத்தின் இரண்டாவது திங்கட்கிழமை பூசை வழிபாடுகள் இன்று இடம்பெறவுள்ளன. மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

காலை 11 மணியளவில் அபிஷேகம் இடம்பெற்று பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (ச-100)

## பகிரங்க ஏல விற்பனை

**Photo Copier, Fax, Printer Machine, Laptop, Scanner, UPS, Pickup Battery, Vehicle Parts, Android Tablet, Monitor, Refrigerator, Multimedia Projector, Television, Redio, Tyre** மற்றும் ஏனைய இலத்திரனியல் பொருட்கள், தளபாடங்கள் என்பன 26.03.2026ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பிரதம செயலாளர் அலுவலக வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.


தகவல்:
பிரதம செயலாளர்
பிரதம செயலாளர் செயலகம்,
வட மாகாணம்.

(CR 47269)A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1943



மறைவு 21 . 03 . 2026

### பொன்னர் கந்தையா (ஆசாரி)

வேலம்பிராயை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கந்தையா கடந்த 21.03.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், அமரர் கிட்டுணர் - பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும், லக்சுமியின் அன்புக் கணவரும், அமரர் தெய்வநாயகி, அமரர் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் ராசம்மா, மனோன்மணி, அமரர் சுப்பையா, ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அமரர் மோகனேஸ்வரன், லோகேஸ்வரன் (கொழும்பு), லோகேஸ்வரி (சுவிஸ்), வதனி (பிரான்ஸ்), பாமினி (ஜேர்மனி), ஜெகனேஸ்வரன் (சுவிஸ்), பிரதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேஸ்வரி (கொழும்பு), தியாகராயா (சுவிஸ்), கெங்காதரன் (பிரான்ஸ்), நவனீதன் (ஜேர்மனி), சோபிகா (சுவிஸ்), அபிரா ஆகியோரின் மாமனாரும், ரஜீவன், தனுஷ், தஜீனா, தயூரன், பவிஷா, வேலாஷ், சாய்ஹராஷ், சிபியா, சேயோன், சுயன், ஜெனிசன், சாய்கவி, ஜெஸ்வந், பிரணாவ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2026) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.40, புறூடி லேன், அரியாலை மேற்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.40, புறூடி லேன்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
0777220055,
0777280988

(CS 31494) A






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.